1981 மே 6]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, அரசைப் பொறுத்தவரையில், அரசுக்கு இருக்கிற நிதி ஆதாரத்தி தில் என்னென்ன உதவிகளைச் செய்ய முடியுமோ அந்த உதவி களை அவ்வப்போது செய்து வருகிறோம். நாம் என்னதான் உதவிகளைச் செய்தாலும் தாங்கள் படித்து முன்னேற வேண்டு மென்ற உணர்வு இல்லாமல் முன்னேற முடியாது. குதிரையை தண்ணீர் குடிக்க கொண்டுபோய் விடலாமே தவிர, தண்ணீரைக் குடிக்க வைக்க முடியாது.

நாமக்கல் வட்டத்தில் தொழில் நுட்ப பயிற்சிப் பள்ளி அமைக்கும் திட்டம்.

*வினா எண். 993—திரு. சி. சிவப்பிரகாசம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் வட்டத்தில் தொழில் நுட்ப பயிற்சிப் பள்ளி அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. சி. சிவப்பிரகாசம்: தலைவரவர்களே, நாமக்கல் வட்டம் நாளடைவில் மாவட்டமாக ஆக்கப்படும் சூழ்நிலை இருப்பதாலும், அந்தப் பகுதி தொழில் துறையில் பெருமளவு முன்னேறி இருப்பதாலும் அந்தப் பகுதியில் ஒரு தொழில் நுட்பக் கல்லூரியை ஏற்படுத்த இனிமேலாவது அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, அங்கே கல்லூரிகள் இரண்டு, ஆண்களுக்கு என்றும் பெண்களுக்கு என்றும் ஆரம்பிக்கப்பட்டு, அங்கே மாணவர்கள் சேர்ந்து படிக் காமல், அவை சரியாக நடை பெறவில்லை என்ற விவரம் இருக் கிறது. இருக்கிற வசதிகளை நல்லமுறையில் பயன்படுத்திக் கொள்ள முதலில் அங்கே இருக்கிற மாணவர்கள் முன்வர வேண்டும். அங்கே இருக்கின்ற கல்லூரிகளை விட்டுவிட்டு, அவர்கள் வேறு இடத்தில் படிக்கின்ற சூழ்நிலையைத் தவிர்த்து, இருக்கின்ற வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். தொழில் நுட்பக் கல்லூரியைப் பொறுத்தவரையில் இப்போது அங்கே ஆரம்பிக்கும் உத்தேசம் இல்லை.